REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 29உ சனி (12—1—57) ★ ★ வெளியூர்: மார்கழி 30உ ஞாயிறு (13—1—57) [இதழ் 18

மக்கள் சக்தி வாகை சூடுகிறது!

கல்கத்தா, சன. 10—

மேற்கு வங்கத்திலுள்ள கைத்தறி மொத்த வியாபாரிகள், கடைக்காரர்கள், தெருவில் விற்பனை செய்வோர் அனைவரும் கைத்தறித் துணி மீதும், மற்ற பருத்தித் துணிகள் மீதும் விதிக்கப்படும் விற்பனை வரியை எதிர்த்துச் சில நாட்களாகப் பொது வேலைநிறுத்தமும், கடையடைப்பும் செய்துவந்தனர்.

ஆட்சியிலுள்ளோர், உடனே இப்பிரச்சினையில் ஒரு முடிவு காண்பதற்குக் கைத்தறித் துறையினரைக் கலந்துபேசினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை திட்டச் செலவு வெட்டப்படுகிறது!

ரூ. 40 கோடி ரூ. 32 கோடியாகக் குறைகிறது

இதில் 60 சதவிகிதமே டெல்லி உதவுமாம்!

மீதமுள்ள 40 சதவிகிதச் செலவை சென்னை அரசாங்கமே தேடிக்கொள்ள வேண்டுமாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில் மேற்கொள்ளக் கருதப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்காக ஏறத்தாழ ரூ 40 கோடி வரையில் செலவிடுவதென சென்னை அரசாங்கம் முடிவுகட்டி இருந்தது.

இப்பொழுது அதற்குப் பேராபத்து ஏற்பட்டு இருக்கிறது அதையும் குறைத்துப் போட, இந்தியப் பேரரசு சதி செய்துவிட்டது.

சென்னை அரசாங்கத் திட்ட மொத்தச் செலவுத் தொகையில் 15 சத விகிதத்தைக் குறைக்கவேண்டும் என டில்லி அரசாங்கம் வற்புறுத்தி இருக்கிறது.

அதன்படி, சென்னை அரசாங்கத் திட்டத்தின் முதலாண்டுச் செலவில் ரூ. 6 கோடிக்குமேல் வெட்டப்பட இருக்கிறது.

திட்டத்தின் முதலாண்டுச் செலவு மொத்தத்தில் 32 அல்லது 34 கோடி ரூபாய் அளவில்தான் இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

திட்டத்தை நிறைவேற்றுவதற்கான சாதனங்களாகவுள்ள வெளிநாட்டு நாணய உதவி, இரும்பு, உருக்கு, சிமெண்டு போன்ற இனங்களில் ஏற்பட்டுள்ள பற்றுக்குறையைக் கருதியே, இந்த வெட்டுக்கு அவசியம் ஏற்பட்டு இருப்பதாக யூனியன் அரசாங்கச் சார்பில் கூறப்படுகிறது.

இவ்வாறு குறைக்கப்படும் தொகையில் 60 சத விகித உதவியையே இந்தியப் பேரரசு செய்யும் என்றும், மீதமுள்ள 40 சதவிகிதத் தேவையை, சென்னை அரசாங்கம் இப்பகுதியிலேயே தேடிக்கொள்ள வேண்டுமென்றும் முடிவாகி இருக்கிறது.

மேற்குறித்த முடிவு, யூனியன் சர்க்கார் அதிகாரிகளும் சென்னை அரசாங்க அதிகாரிகளும், சென்ற மூன்று நாட்களாகக் கலந்து பேசினதின் விளைவாகும்.

அறிவிப்பு

பொங்கல் விழாவை முன்னிட்டு 'நம்நாடு' அலுவலகத்திற்கு 14-1-57 திங்கள் விடுமுறையாதலால் அடுத்த இதழ் சென்னை 15-1-57-ல் (வெளியூர் 16-1-57) வெளிவரும்.

குறிப்பு:—முன்னர் அறிவித்திருந்தபடி 13-1-57 ஞாயிறன்று வெளியிடப்பட இருந்த தனி இதழ் வெளிவராது. (ஆ-ர்)

ரூ. 100 கோடி செலவில் இராகுட் அணைத் திட்டம்

முதல் நீர்மின்சார ஏற்பாட்டை பிரதமர் நேரு திறந்துவைக்கிறார்

புதுடில்லி, சன. 11—

ரூபாய் 100 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ள இராகுட் அணைக்கட்டு திட்டத்தின் முதல்கட்ட பூர்த்தியை அறிவுறுத்தும் வகையில், அங்குள்ள நீர்மின்சார உற்பத்தி ஏற்பாட்டை, வருகிற ஞாயிற்றுக்கிழமை இந்தியப் பிரதமர் நேரு திறந்துவைக்கப்போகிறார்.

ஒரு முனைக்கும் மற்றொரு முனைக்கும் 16 மைல் நீளமுள்ள மகாநதியின்மேல் கட்டப்படும் இராகுட் அணைக்கட்டானது, உலகத்திலேயே மிக நீளமான அணைக்கட்டு ஏற்பாடு என்று சொல்லப்படுகிறது. அம் மிகப்பெரும் ஆற்றின் நீரை ஒரிசா மாகாணத்தின் செல்வச் செழுமைக்குப் பயன்படுத்த கட்டப்பட இருக்கும் அணைக்கட்டு ஏற்பாடுகளில், இது தான் முதல் ஏற்பாடாகும் என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

மகாராணி கைது!

மகளின் பிறந்த நாள் விழாவில் அதிகாரிகளுக்கு மது வகை?

பம்பாய்—

பம்பாயிலுள்ள மோர்வியைச் சேர்ந்த மகாராணியான குமுத குமாரி அவர்களின் கோபிந்த மகாலை திடீரென பம்பாய் மது விலக்கு இரகசியப் போலீசார் சோதனையிட்டதில், அங்கு 5 யூனிட்டு மது வகைகள் இருந்ததாகக் கண்டுபிடித்து, அம்மகாராணியையும், அவருடன் இருந்த மற்றும் சில 'பெரிய தலைகளை'யும் கைது செய்திருக்கின்றனராம்!

அந்த இராணியார் தனது மகளின் பிறந்த நாள் விழாக் கொண்டாடினர் என்றும், அந்த விழாவிற்கு வரவழைக்கப்பட்ட பெரும் பெரும் அதிகாரிகளுக்கு மதுவகை வழங்க இவைகள் வைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிகிறது.

தனிநாடு கோரும் நாகர்கள் கிளர்ச்சி உருமாறுகிறது

பிரயாணிகள் இரயில் வண்டியை வெடிகுண்டு வைத்துத் தகர்த்துவிட்டனராம்

ஷில்லாங், சன. 10—

தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கையின் விளைவாக நாகர்கள் மேற்கொண்டு வருகின்ற ஆர்ப்பாட்டச் செயல்கள் மேலும் மேலும் நீடித்து வருவதுமட்டுமல்லாது, மிகத் தீவிரமானதாகவும் பயங்கரமானவையாகவும் உருமாறிக்கொண்டே வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை இரவு தன்சிரி—டால்டாலி இரயில் நிலையங்களுக்கிடையில் ஓடிக்கொண்டிருந்த பிரயாணிகள் இரயில் வண்டி ஒன்றை நாகர் ஆர்ப்பாட்டக்காரர்கள் வெடிகுண்டுகளால் தாக்கித் தீக்கொளுத்தியிருக்கின்றனர்.

எஞ்சினிலுள்ள 'பாயலரும்,' அந்த இரயில் வண்டியிலுள்ள ஒரு பெட்டியும் நாகர்களின் வெடிகுண்டுக்கு இரையாகிவிட்டன என்று தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் விளைவாக, வடகிழக்குப் பிராந்திய இரயில்வே, இந்த நாகர் மலைப் பகுதியில் இராக்காலத்தில் இரயில் வண்டிகள் பிரயாணத்தைத் தடை செய்துவிட்டிருக்கிறது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் மலைப் பகுதியின் உட்பாகத்தில் ஏறக்குறைய 100 மைல் நீளத்திற்கு இரயில் பாதைகள் அமைந்திருக்கின்றனவாம்.

மந்திரிக்கு நகரசபை உறுப்பினர்கள் கருப்புக்கொடி காட்டினர்

எதேச்சாதிகார முடிவுக்கு எதிர்ப்பு

11 பேர் கைது செய்யப்பட்டனர்

நாசிக், சன. 10—

இங்குள்ள பாலம் ஒன்றுக்குத் திறப்பு விழாவாற்றவந்த பம்பாய் மாநில ரெவினியூ அமைச்சரான ரசிக்லால் பரீக் என்பாரை கருப்புக் கொடிகள் காட்டி வரவேற்று, அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த 4 நகரசபை உறுப்பினர்கள் உட்பட 11 ஆர்ப்பாட்டக்காரர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

அவ்விழாவில் அவ்வமைச்சர் பேசுகையில், இருமொழி பம்பாய் மாநிலம் ஒரு நிலையான முடிவுக்கு வந்துவிட்டது என்றும், இனிமேல் அது, மராத்தி—குஜராத்தி என இரு மாநிலங்களாகப் பிரிந்து செல்ல வழியோ சந்தர்ப்பமோ கிடையாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்!

வதில்லையென்று அவர் மு... செய்திருப்பதாகவும் தெரிகிறது

துறந்துவிட்டாராம்!

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், பார்லிமெண்டு உறுப்பினர் பதவியையும் இராஜிநாமாச்செய்துவிட்டாராம்! அவர் உறுப்பினரான தொகுதிக்குத் துணைத் தேர்தல் நடைபெறக்கூடும்.

பிரிட்டிஷ் அரசியார் அவருக்குப் பட்டம் அளித்ததாகவும், தற்போதைக்கு அதை ஏற்றுக்கொள்

அங்கேரியில் ரஷ்யத் தலையீடு; விசாரிக்க ஐ. நா. குழு நியமனம்

வாக்கெடுப்பில் இந்தியா கலந்துகொள்ளவில்லை!

உள்விவகாரங்களில் தலையீடென காதர் சர்க்கார் எதிர்ப்பு

வியன்னா, சன 11—

அங்கேரி நிலைமை பற்றி நேரில் சென்று விவரங்கள் சேகரிப்பதற்கு ஐந்து நாடுகள் கொண்ட குழு ஒன்று நிறுவப்பட வேண்டுமென்ற பிரேரபணை ஐ நா. அசெம்பிளியில் நிறைவேறியிருக்கிறது.

இக்குழு ஏற்படுத்தியதை அங்கேரி எதிர்த்திருக்கிறது; இப்பிரேரபணை, அங்கேரியின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகுமென்றும், இதை ஐ நா. உறுப்பினர் நாடுகள் நிராகரிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

அங்கேரியிலுள்ள சோவியத் இராணுவம் திரும்பப் பெறப்பட வேண்டுமென்றும், அங்கேரி மக்களை நாடு கடத்துவதை நிறுத்த வேண்டுமென்றும், ஐ நா. ஆதரவில் அங்கு தாராளமான அளவில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் ஐ. நா தீர்மானம் கோரியது.

இத்தீர்மானத்தை கம்யூனிஸ்டு அணி நாடுகள் எதிர்த்தன; இந்தியா-அரபு நாடுகள்—யூகோ உள்ளிட்ட 11 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஹங்கேரி தலைநகரில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலியாயினர்

புடாபெஸ்ட், ஜன. 11—

ஹங்கேரி தலைநகரிலுள்ள தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தை ஒடுக்குவதற்காக இராணுவத்தினர் பன்முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் இருவர் கொல்லப்பட்டதாகவும் நான்குபேர் காயமடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

மோசமான பொருளாதார நிலைமையையும், காதர் சர்க்காரையும் கண்டித்துத் தொழிலாளர்கள் குரலெழுப்பியுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற தொழிற்சாலையில்தான் இந்தியா எகிப்து போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படும் இரயில் எஞ்சின்கள் போன்றவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

★★★★★★★★★★★★★★★★★

சென்னை - வண்ணை

தொகுதி கிளைக் கழகங்களுக்கு:

★

சென்னை--வண்ணாரப்பேட்டை தொகுதியைச் சேர்ந்த 1, 2, 3, 4-ஆம் வட்ட தி. மு. கிளைக் கழகச் செயலாளர்களையும், செயற்குழு உறுப்பினர்களையும் தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக்குழுவின் தலைவர் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சந்திக்க விரும்புகிறார்கள்.

13—1—57 ஞாயிறு மாலை 3-மணிக்கு, மேற்கண்ட வட்ட கிளைகளின் செயலாளர்களும், செயற்குழு உறுப்பினர்களும் இராயபுரம் 'அறிவகத்'தில் தவறாது சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★

கைப்பெட்டிக்குள் அடங்கும் ஹெலிகாப்டர்!

கலிபோர்னியா, சன 10—

அமெரிக்கக் கடற்படை இலாகா ஒருசிறிய 'ஹெலிகாப்டர்'விமானத்தைக் கண்டுபிடித்திருக்கிறது; இதன் எடை 230 இராத்தல் தானாம்!

இதைப் பத்து நிமிடங்களில் தனித் தனியே பிரித்தெடுத்து கைப்பெட்டிக்குள் வைத்து எடுத்துச்செல்லலாமாம்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 12—1—'57 சனி

பொங்கல் திருநாளில்!

நாளை மறுதினம் தமிழகமெங்கணும் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தோடும்.

ஆடவர்களனைவரும் ஏழை, செல்வந்தர் என்ற வேற்றுமையை மறந்து, அகமும் முகமும் மலர விழாக் கொண்டாடி களித்திருப்பர்.

பெண்டிர் பலரும், புதிய பட்டுப் பட்டாடை உடுத்திப் பூரிப்புடன் மகிழ்ந்து கிடப்பர்.

சிறுர்களும் இளைஞர்களும் புத்தம் புதிய ஆடைகள் அணிந்து, தங்களை மறந்தவர்களாய் இன்பம் துய்த்து இருப்பர்.

இப்படி, மாளிகைவாசி முதல் மண் குடிசையில் நெளிந்துகொண்டிருக்கும் பஞ்சை வரையில், ஒருமனப்பட்டுக் கொண்டாடக்கூடிய ஒரே ஒரு பெருநாளான பொங்கல், நாளை மறுதினம் வருகிறது.

அப்பொங்கல் பெருநாளில் எழும்பும் 'பொங்கலோ பொங்கல்' என்ற முழக்கத்தை சிற்றூர் பேரூர் அனைத்து வாழ் மாந்தரும் முழக்குவர். அப்பெருநாளின் மணம் பட்டிதொட்டிகள்முழுவதிலும் வீசப் போகிறது.

உழவனின் இடையரு பெருமுயற்சி, நல்லதோர் விளைவாகக் காட்சிதரும் நன்னுளாகும் அது. தாம் இட்ட பயிரை, தங்கள் உழைப்பையும் நம்பிக்கையையும் நாசம் செய்துவிடாது வீட்டுக்குள் வந்து குவிந்து கிடப்பதைக் கண்ட உழவர் பெருமக்கள் உள்ளம் பூரிக்காமல் எப்படி இருக்க முடியும்?

கரம்பைக் கழனியாக்கி, சேடை கலக்கி, சத்தான எருவிட்டு, செந்நெல்லை விதைத்து, காலாகாலத்தில் நீர் பாய்ச்சி, பொன் மணிக் கதிரிடைக் கண்டு, தங்கள் உழைப்பு வென்றது—இயற்கை தோற்றது, என்று எண்ணி எண்ணி, உழவர் கூட்டம் இதயம் பூரிப்பதிலே தவறு ஏது?

உழவர்கள் உழைப்புடன் போட்டியிட்டு மாடும் கன்றும் தம் உழைப்பால் மனித குலத்திற்குப் பெருந்துணை செய்துவரும் திருநாளாம் பொங்கல் மறுநாள் கொண்டாடப்படுகிறது.

இயற்கையை வெல்ல மனித குலம் தொடுத்துவரும் கோரப் பெரும் போரில், அதன் கொடுமையையும் பளுவையும் தாங்கிக்கொள்ளும் உயிர் வாழ்வனவாக மாடும் கன்றும் உள்ளன என்ற உண்மையை, தமிழ் மக்கள் அன்றே நன்கு உணர்ந்திருந்தனர். அதன் பலனாக மாடுக்கும் கன்றுக்கும் விழா கொண்டாடும் பெருநெறியைத் தமிழ் மக்கள் பின்பற்றத் தொடங்கினர்.

மாட்டுப் பொங்கலன்று ஆடும் மாடும் அழகிய புதுத் தோற்றத்துடன் காட்சி தரும். அதுகண்டு, அதன் கைம்மாறு கருதா உழைப்பால், தங்களுக்கு ஏற்பட்ட பலனை நினைத்து உழவர்கள் மகிழ்வர்—பெருமூச்செறியவும் செய்வர்.

கால்நடைச் செல்வமில்லையேல், நாம் மேலும் எவ்வளவு கடுமையாக உழைத்திருக்க வேண்டும் இப்பெரும் பலனைக் காண என்று சிந்தித்துப் பாராத உழவன் இருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது.

உழைப்பின் மதிப்பை உயர்த்திக்காட்டும் நாளாக இப்பொங்கல் புது நாள் அமைந்திருக்கிறது.

உழைப்பின் உள்ளடக்கத்தை நமக்கெல்லாம் தெளிவாகத் தெரிவிக்கும் திருநாளாக இப்பொங்கல் நாள் இருந்து வருகிறது.

நாகரீகத் துவக்கத்தை வரையறுத்துக் காட்டும் வரலாற்று நாளாக இப்பொங்கல் புதுநாள் விளங்குகிறது.

இப்பொங்கல் நாளை, தமிழர் திருநாளாக ஆக்கித் தந்த பெருமை முழுவதும் காலஞ்சென்ற தமிழ் பேராசிரியர் கா. நமசிவாயனுர் அவர்களையே சாரும். எனவே, அத்திருநாளில் அப்பெரியாரை நினைப்பதும் தமிழ் மக்கள் தலையாய கடமையாகும்.

பொங்கற் புதுநாளில் புத்தாடை புனைந்து ஆடவரும் பெண்டிரும், நெருங்கிய சுற்றத்தாரையும் நண்பர்களையும், அவரவர் இல்லம் தேடிச் சென்று, நலம் விசாரிப்பர். இப்படியே அவர்களும் திரும்பச் செய்வர்.

இவ்வாண்டு பொங்கல் நாளில், தாம் பிறந்தத் தமிழகத்திற்கு ஆற்றவேண்டிய சிறப்பான கடமையொன்று, தமிழ் மக்கள்மீது சுமந்திருக்கிறது. அக்கடமையை அவர்கள் ஆற்றத் தவறக்கூடாது.

ஒருவரை ஒருவர் நெருங்கி நலம் உசாவும் பொழுது, நமது கழகம் தேர்தல் போர்க்களம் புகுந்திருக்கும் நிலை பற்றியும் உரையாட வேண்டும்.

நமது கழகத்தின் தேசிய விடுதலை முழக்கத்தில் உள்ளடங்கி இருக்கும் தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வு குறித்து, ஒவ்வொருவரும் நன்கு தெளிவு பெறும் வகையில் விவாதித்துக்கொள்ள வேண்டும்.

தேர்தலில் முன்னேற்றக் கழகத்தையே வெற்றிபெறச் செய்வது என்ற முடிவிற்கு, இப்பொங்கல் நாளில் தமிழ் மக்கள் அனைவரும் ஒருமனமாக வந்தாகவேண்டும். அதுவே தங்கள் கடமை எனச் சூளுரைத்துக்கொள்ள வேண்டும்.

கழகத்தின் வெற்றி தமிழ் மக்களின் வெற்றி என்பது மிகையாகாது.

இதுவே நமது பொங்கல் நாள் முறையீடு. நமது பொங்கல் பரிசும் இதுவே.

வாழ்க தமிழ் மக்கள்!

சூயஸ் பிரச்சினைக்கு புதிய முயற்சி

சூயஸ் கால்வாய்ப் பிரச்சினைக்கு ஒரு அடிப்படைத் திட்டத்தைக் கண்டுபிடிக்க 6 நாடுகளின் வட்டமேசை மாநாடொன்றைக் கூட்டுவது பற்றி ஐ. நா. செயலாளர் ஆராய்ந்து வருகிறாராம்.

தோழரே! நல்லோரே! விரைவீர்!

நொந்துபோனவர்களையும், நமது வளர்ச்சி கண்டு மனம் வெந்துபோனவர்களையும் மறப்போம்!

செய்ய வேண்டிய வேலை ஏராளம்; நேரமோ மிகக் குறைவாகும்!

சென்னையில் அண்ணு கனிவுரை

சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில், திராவிட மாதர்கள் சார்பில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் ஆற்றிய பேருரையின் இருபகுதிகள் முன்னரே வெளிவந்துள்ளன; மற்ருெரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

"ஈரெட்டிலும் நான் சுற்றிப் பார்த்து வருகிறேன்; நாம் தேர்தலுக்கு நிற்பதைக் கேட்டு, 'ஏன் இவர்கள் நிற்கிருர்கள் என்று கேட்பார் இல்லை'—என்பதை அறிகிறேன். 'தேர்தலுக்கு நிற்கிருர்களே! ஐயோ, பாவம்! இவர்களிடம் பணம் இல்லையே!' என்று பரிதாபப்படுவோர்தான் இருக்கிருர்கள்.

"சில பேர் இருக்கிருர்கள்—நாம் தேர்தலுக்கு நிற்பதையே விரும்பாதவர்கள்—அவர்கள் சில பேர்; பல பேர், நாம் நிற்பதை விரும்புகிருர்கள்; அந்தச் சில பேரும் நொந்துபோனவர்கள். நம் வளர்ச்சி கண்டு மனம் வெந்து போனவர்கள். அதனுல் அவர்கள், நம்மைப் பற்றி எப்படி வேண்டுமானுலும் பேசட்டும். நாம் இந்த மங்களகரமான நேரத்தில் அவர்களை மறப்போம்!

"நமது தோழர்களும் ஆதரவாளர்களும், இனி சாதிக்க வேண்டிய காரியம் அதிகம்; ஆனுல் உள்ள நேரமோ மிகக்குறைவு!

"ஒன்றை, தோழர்களும் மக்களும் மறந்துவிடக் கூடாது; ஒரு வெற்றியைப் பெறுவதற்கு மிக நீண்டகாலம் போரிட்டுத்தான் ஆக வேண்டுமென்பதோ, அந்தப் போராட்டத்தில் பெரும் பயங்கரப் படைக்கலன்களை உபயோகித்துத் தான் ஆக வேண்டுமென்பதோ இல்லை.

"பெரிய மாமிச மலை என்று கருதப்படுகிற ஒரு பயில்வானை, சுச்சலாக உள்ள—ஆனுல் நுணுக்கமான தேர்ச்சி பெற்ற பயில்வான் ஒருவர் தோற்கடித்துவிடுவதைக் காண்கிறேம். காங்கிரஸ், பெரும் மாமிச மலையாகக்கூட இருக்கலாம்; அதனுலேயே கழகம், அந்தப் பெரும் 'பணமலை'யைக் கண்டு அஞ்சிட வேண்டுமென்பதல்ல!

"காங்கிரஸ்காரர்கள், இந்தத் தேர்தலில் பணத்தைக்கொண்டு வெற்றிபெற்றுவிடலாம் என்று கருதினுல், அதனை நாம் முறியடிப்போம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

"அடுத்தாற்போல, காங்கிரசார் பண்டித நேருவை அழைத்துவந்து விளம்பரம் பெறப் போகிருர்களாம். வெட்கமிருக்கவேண்டாமா, அவர்களுக்கு இப்படி செய்வது பற்றி?

"கழகத்தவர் எல்லாம் சாமானியர்கள் என்ருல், ஏன் பெரிய மனிதரான பண்டிதரை இங்கு அழைத்து வரவேண்டும்? கழகத்தவர், யாரைக் கூட்டிவந்து காட்டி ஓட்டு கேட்கப்போகிருர்கள்? நேற்றும் இன்றும் இங்கே மக்களிடை உலவிக்கொண்டிருக்கிற நாங்கள் தானே மக்களிடம், இன்று எதைப் பேசுகிறேமோ அதையே பேசி ஓட்டுக் கேட்கப்போகிறேம்.

"சரி, வரப்போகிற பண்டிதர், இங்குள்ள நிலைகளில் எதை மக்கள் கண்ணிலிருந்து மறைத்துவிடுவார் -மறைத்து விட முடியும்? புதிதாக எதை மக்களுக்குக் காட்டுவார்—காட்டமுடியும்?

"இங்கேயுள்ள வறுமையை, வேலையில்லாத் திண்டாட்டத்தை, சேரிகளில் அவதியுறும் மக்களை மக்கள் கண்ணிலிருந்து மறைத்துவிடுவாரா பண்டிதர்? இங்கு நிலவுகிற சர்க்காரின் அடக்குமுறைப் போக்கை—சர்வாதிகார வெறியை, இல்லை என்று சொல்லுவாரா? விலைவாசிகள் விஷம்போல ஏறிவரும் கொடுமையை மறுத்துரைப்பாரா? எதை இல்லை என்பார்? புதிதாக 'நாங்கள் சாதித்தவை' என்று எதைக்காட்டுவார்? காங்கிரசார் சிந்தித்துப் பார்க்கட்டும், ஒருமுறை—பண்டிதரை வரவழைப்பதற்குமுன்!"

80-இலட்சம் டன் உணவுத் தானியங்கள்

இறக்குமதி செய்ய இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளதாம்

புதுடில்லி, சன. 9—

80 இலட்சம் டன் உணவுத் தானியங்களை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தங்களை இந்தியா செய்துகொண்டிருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து 35 இலட்சம் டன் கோதுமையை மூன்ருண்டு காலத்தில் வாங்கிக்கொள்ள உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது

ரஷ்யா-- ஆப்கானிஸ்தான் வர்த்தக உடன்பாடு

புதுடில்லி, சன. 9—

ரஷ்யா—ஆப்கானிஸ்தானுக்கிடையில், 1957-58-ம் ஆண்டிற்கு வர்த்தக ஒப்பந்தமொன்று ஏற்பட்டிருக்கிறது.

மோட்டார் சாமான்கள் எண்ணெய், இரும்புத் தகடுகள் ஏற்றுமதியை ரஷ்யா கணிசமான அளவு அதிகப்படுத்தும்.

பருத்தி, கம்பளி, தோல், உலர்ந்த பழங்கள், எண்ணெய் விதைகள் ஏற்றுமதியை ஆப்கானிஸ்தான் அதிகரிக்கும்.

பட்டுத் தறிக்கு மூலதனக் கடனுதவி உயர்த்தப்படும்?

நாட்டில் உள்ள பட்டுத்தறிகளுக்கு நடைமுதல் மூலதனக் கடன் தொகையை ரூ. 500-லிருந்து ரூ. 1,000 ஆக உயர்த்தப்பட வேண்டுமென இந்தியப் பேரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சிறிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு பிரெஞ்சு—இராக் நாடுகள் வகுத்த சதித்திட்டத்தில் முன்னுள் சிரியத் தலைவர் 15,000 பவுன் இலஞ்சம் பெற்றுக்கொண்டதாக நீதிமன்றமொன்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

தமிழர் போராட்டம்

இலங்கைப் பிரதமரின் கண்ேணாட்டம்?

கொழும்பு, சன. 11—

சொந்தக் கார்களின் எண் பலகையில் சிங்கள எழுத்துக்கள் இருப்பதைக் கண்டித்து இலங்கைத் தமிழர் நடத்தும் போராட்டம் வகுப்பு துவேஷத்தை அதிகப்படுத்துவதாகும் என்றும், தான் அந்த போராட்டத்தைக் கவனித்து வருவதாகவும் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியுள்ளார்.

'டில்லி எருமை'கள்!

ரஷ்யாவுக்கு ஏற்றுமதியாம்!

புதுடில்லி, சன. 11—

1956-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து சோவியத் யூனியனுக்கு ஒரு கப்பல் நிறைய டில்லி எருமைகள் அனுப்பப்பட்டனவாம்!

இந்த எருமைகள், ஆண்டுக்கு 75 சதவிகிதம் வெண்ணெய் எடுக்கக் கூடிய 3,000 கிலோகிராம் பால் கறக்குமாம்! இதற்காக அங்கு ஒரு பால் பண்ணையும் அமைக்கப் பட்டுள்ளதாம்'

தேவைக்கு அதிகமாக சர்க்கரை இருக்கிறதாம்

இந்தியாவிடமிருந்து நான்கு நாடுகள் வாங்குமாம்

புதுடில்லி, சன. 9—

ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் 50 ஆயிரம் டன் சர்க்கரை தேவைக்கு அதிகமாக இந்தியாவிடம் இருக்கிறதாம்.

இரண்டு மத்தியக் கிழக்கு நாடுகளும், இரு அண்டை நாடுகளும் இந்தச் சர்க்கரையை வாங்கிக்கொள்ள முன்வந்துள்ளனவாம் அவைகளில் பாகிஸ்தானும் ஒன்ரும்.

இந்தியச் சர்க்கரையின் விலை மிகவும் மலிவாக இருப்பதே இதற்கு முக்கியக் காரணமாம்!

ஆசிரியருக்குக் கடிதம் :

மதுரைத் தமிழ்ச் சங்கம்

ஐயா,

'நம் நாடு' வெளியீர் 9-1-57 இதழில் ஆசிரியருக்குக் கடிதங்கள் என்ற பகுதியில், மதுரையில் வாழும் திரு. கணபதி என்பவர்—ஆசிரியர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வுக்கான பாடங்கள் கற்பிப்பதற்கான வகுப்புகளை ஏற்பாடு செய்யாததாகக் கற்பனை செய்துகொண்டு குறைபாடு கூறுவது,வியப்பையும் நகைப்பையுமே தருகின்றது. மதுரை நகர்வாழ் அவ்வாசிரியர், கடிதத்தை எழுதுமுன், தமிழ்ச் சங்கத்திற்குச் சென்று விசாரித்து உறுதி செய்யும் வாய்ப்பினைப் பெற்றிருந்தும் செய்யாது, 'கிணற்றுத் தவளை' போல் 'அது இல்லை; இது இல்லை' என்று குறைகூற முன்வந்தது வேடிக்கையே!

1956 ஆகஸ்டு மாதம் முதல், நுழைவுத் தேர்வு'—'இளம் புலவர்'—'புலவர்' என்ற மூன்று வகுப்புகளை ஏற்பாடு செய்து, மூன்று வகுப்புகளுக்கும் சென்னைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டங்களையே ஏற்று சிறந்த தமிழ்ப் புலவர்களைக்கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் பாடம் நடத்திவருவது நாடறிந்த உண்மை. பல்கலைக் கழகப் பாடத்துடன் தனியாக ஓரிரு நூல்கள் அதிகமாகவே பின்னிரண்டு வகுப்புகளுக்கும் பாடங்களாக வைக்கப்பட்டுள்ளன. நண்பர் திரு. கணபதி அவர்கள் இக்கடிதம் கண்ட பின்னராவது தமிழ்ச் சங்கத்திற்கு வருகை தந்து விளக்கம் பெறுவாராக.

பு. ரா. வேங்கடாசலம்

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கல்லூரி மாணவர் சங்கம், மதுரை.

குறிப்பு:— இந்த விவாதம் இத்துடன் நிறுத்தப்படுகிறது.

(ஆ-ர்.)

வீராப்புப் பேசுவோர் நிலைமை

பொதுச்செயலாளரின் தெளிவுரை

சென்னை சூளை, ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக ஆண்டு விழாவில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய பேருரையின் மூன்று பகுதிகள் முன்னரே வெளிவந்துள்ளது; இறுதிப் பகுதியின் தொடர்பு இங்கு தரப்படுகிறது :—

"அந்தக்காலத்தில் காங்கிரஸ்காரர்கள் மக்களிடத்தில் சென்று, 'அவர்களெல்லாம் பணம் தருவார்கள் — வாங்கிக்கொள்ளுங்கள்; ஆனால், ஓட்டை மட்டும் மாட்டுப் பெட்டியில், மஞ்சள் பெட்டியில் போடுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்களே! இப்போது அதே மக்கள், நீங்கள் கற்றுக் கொடுத்த அதே பாடத்தைத் திரும்பி உங்களுக்கே கற்றுத் தரமாட்டார்கள் என்று நினைக்கிறீர்கள்? இவற்றையெல்லாம் நாங்கள் சொல்லமாட்டோம்; ஏனென்றால் அது நாணயமானதல்ல; என்றாலும் என்ன செய்வது? அது நீங்கள் கற்றுக்கொடுத்த பாடமாயிற்றே!

"அம்மைக் கையிலெடுத்தவன் அம்பால்தான் செத்து மடிவான்; கத்தியைக் கையிலேந்தியவன் கத்தியாலேயே குத்துண்டுபோவான்; துப்பாக்கியை ஏந்தியவன் துப்பாக்கிக்குத்தான் இரையாவான். அதுபோலத்தான் தேர்தலில் மாற்றானைத் தோற்கடிக்கக் காங்கிரசார் என்னென்ன தந்திரங்களை மேற்கொண்டார்களோ, அதே தந்திரங்களால் கடந்த தேர்தலிலும் விழ்த்தப்பட்டார்கள்! இதையெல்லாம் புரிந்து கொண்ட பின்னர்தான், நம்மைப் பார்த்து, 'இவர்களால் நம்மை ஆட்ட முடியுமா— அசைக்க முடியுமா?' என்று கேட்கிறார்கள்!

"நாம் எத்தனையோ முறை பதிலளித்து விட்டோம்—பல மேடைகளில்; இன்னும் புரிந்து கொள்ள முடியாத சுப்பிரமணியம், நம்மை வெள்ளைக்காரத் தாசானுதாசர்கள் என்று அலறித்திரிகிறார்.

"அண்ணாவோ நானோ, நண்பர் சம்பத்தோ, கருணாநிதியோ, நடராசனோ, வேறு யாரும் வெள்ளைக்காரனிடம் சென்று, 'உன்னுடைய கீழ்ப்படிதலுள்ள வேலைக்காரன்...' என்று கையெழுத்துப்போட்டு ஒரு தம்பிடி வாங்கியிருக்கமாட்டோம். எனவே, எங்களை அவ்வளவு சுலபத்தில் வெள்ளைக்கார தாசர்கள் என்று கூறிட முடியாது.

"இதையெல்லாம் காங்கிரசிலிருக்கும் நமது நல்ல நண்பர்கள்— நேர்மையுள்ளமும் நாணயமும் படைத்தவர்கள் என்றாவது ஒரு நாள் உணர்ந்துவிட்டால், அதற்குப் பிறகு அவர்கள் வந்து நிற்கும் பாசறை தி. மு. கழகமாகத்தான் அமைந்திருக்கும்!

"நாங்களும் கதரைக் கட்டியிருந்தவர்கள்தான். நமது நண்பர் நடராசன் அந்தக் காலத்தில் சென்னை மாவட்டக் காங்கிரசின் உறுப்பினர்; பெரியார் ஈ. வெ. ரா.-வும் அந்தக் காலத்தில் வெள்ளைக்காரர்களிடம் சம்பளம் பெற்றவரல்ல — ஆனால் காங்கிரசின் தலைவராக இருந்தவர்!

"எங்களைப் பார்த்து வெள்ளைக்கார தாசர்கள் என்று கூறுகிறாரே சுப்பிரமணியம்—இவருடைய கட்சிக்குக் 'காங்கிரஸ்' என்று பெயர் வைத்தவனே வெள்ளையனாயிற்றே? அந்தப் பெயரையே இன்னும் வைத்துக் கொண்டிருக்கிற இந்த யோக்கியர் எங்களைக் கேலி பேசுகிறார்—கிண்டல் செய்கிறார்!

"இவர்தான் இப்படி நம்மைப் பார்த்துப் பேசுகிறார் என்றால், இவரது சகா காமராசர், திருச்சிக் கருகிலுள்ள கொப்பம்பட்டியில் பேசியிருக்கிறார் — 'இவர்களெல்லாம் யார் தெரியுமா? ரௌடிகள்' என்று! நான் மிக மிக வருந்துகிறேன்—இதற்குப் பதில் சொல்ல! என்றாலும், அவர் சொன்னார் என்பதற்காகப் பதில் சொல்கிறேன். எங்களையும், காமராசரையும் மக்கள் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் கூறட்டும்-எங்களில் யார் 'ரௌடி'கள் மாதிரி காணப்படுகிறார்கள் என்பதை!

"எங்கள் வீட்டுக் குழந்தைகள் கூட வேண்டாம்—காங்கிரஸ்காரர் ஒருவரது குழந்தையே சொல்லட்டும்—எங்களில் யாரைப் பார்ப்பதற்கு அதற்குப் பயமாக இருக்கிறதென்பதை!

"இதெல்லாம் நாடாளும் அமைச்சர் சொல்லும் சொல்லா? மாற்றாரை இழித்தும் பழித்தும் பேசுபவர் இங்கே அமைச்சராக வீற்றிருக்கிறார். இவரைப் பார்த்து நல்லவரென்றும், இவர் இல்லையென்றால் நாட்டில் அறிவுப் பஞ்சம் ஏற்பட்டுவிடும் என்றும் சொல்லப் பலர் இருக்கிறார்கள்!

"இவர் கடந்த 2½ வருடமாக முதலமைச்சராக இருக்கிறார். இந்த இரண்டரை வருட காலத்தில் சட்டசபையில் அவர் வாய் திறந்து பேசினது இரண்டே தடவைகள்!

"உள்ளத்தில் இருக்கும் கருத்தை வெளியே எடுத்துச் சொல்லும் திறமை இருந்தால் தான் உள்ளத்தில் உறுதி இருக்கும். கருத்தை எடுத்துச் சொல்லும் திறமை ஆட்சியாளருக்கு இருக்க வேண்டும். ஆனால் இந்த நாடாளும் நல்லவர் இரண்டே தடவைகள் வாய் திறந்திருக்கிறார் சட்டசபையில்! ஒரு தடவை சிவசண்முகம் அவர்கள் டில்லிக்குப் போகும் போது பாராட்டிப் பேசியிருக்கிறார்; மற்றொரு தடவை— எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காமராசரைப் பதில் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள்; உடனே சுப்பிரமணியம், தானே பதில் சொல்வதாக எழுந்தார்; ஆனால் உறுப்பினர்கள் மீண்டும் வற்புறுத்தினார்கள்; எனவே பேசினார். அவர் பேசினார்— ஆனால் ஓசை வந்ததே தவிர, சொல் வரவில்லை! உடனே எல்லாரும் சிரித்தார்களாம்; இவரும் சிரித்துக்கொண்டே உட்கார்ந்துவிட்டாராம! இவர்தான் இந்த நாட்டுக்கு அமைந்திருக்கும் அருமையான முதலமைச்சர்! இவர் தான் எங்களைப் பார்த்து 'இவர்களால் என்ன சாதிக்க முடியும்?' என்று கேட்கிறார்.

"எங்களால் வேறு எதுவும் ஆகாவிட்டாலும் ஒன்றுமட்டும் நிச்சயம் செய்து காட்டமுடியும். சட்டசபையிலே செந்தமிழ் கமழச் செய்ய முடியும்! நாங்கள் கேட்கிற வினாக்களுக்குத் தரப்படும் பதிலில் இலக்கணப் பிழை இருந்தால் அதைச் சுட்டிககாட்டுவோம; நல்ல தமிழ் இல்லையென்றால் நாங்கள் எடுத்துத் தருவோம; உள்ளக் கருத்தை எடுத்துச் சொல்லும திராணியும திறமையுமற்றிருக்காது சட்டசபை. இப்படி சட்டசபையை ஒழுங்குபடுத்தும் திறமை எஙகளுக்கு உண்டு!

"சட்டசபையில், 'இவர்கள் குத்துவார்களே —குடைவார்களே' என்று நினைத்தால ஆட்சியான

(4-ம் பக்கம் பார்க்க)

நாடெங்கும் பொங்கல் நாள் விழா

★

சென்னை :

11-வது வட்டம் :

14—1—57 காலை 8 மணிக்கு எண். 4/88 பிராட்வே கிளைக் கழகப் பணிமனையில் தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

29-வது வட்டம் :

14—1—57 காலை கிளைக் கழகக் கட்டிடத்தில் சிறுவர்களுக்குப் பாலும், பகல் 12 மணிக்கு உணவும் வழங்கப்படும்.

32-வது வட்டம் :

15—1—57 இரவு 7 மணிக்கு எழும்பூர் பெரிய சாலையில் கிளைக் கழகச்சார்பில் தோழர் கே. முகில் வண்ணன் தலைமையில் தோழியர் ஜி கஸ்தூரி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

34-வது வட்டம்

14-1-57 காலை 6½ மணிக்கு, நுங்கம்பாக்கம் கிளைக் கழக இல்லத்தில் (8 சி. இராமநாய்க்கன் தெரு), கொடியேற்றுவிக்கப்படும் தோழர்கள் பலர் பேசுவர்.

37-வது வட்டம்

14-1-57 காலை 7 மணிக்கு கிளைக் கழகத்தில் தோழர் சி. வே. ஆறுமுகம் கொடியேற்றிவைப்பார். 8 மணிக்கு தோழர் தி. குமரேசன் தலைமையில் விழாக்கூட்டம் நடைபெறும. தோழர்கள் பலர் பேசுவர். 9 மணியளவில் தோழர் மு அர்ச்சுனன் தலைமையில் சாக்கரைப் பொங்கல் வழங்கப்படும்.

முத்தமிழ் மன்றம் :

14—1—57 காலை 10 மணிக்கு சென்னை சாலைவிநாயகர் கோவில் தெரு முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் கா. மு. சீனுவாசன் தலைமையில் நடைபெறும். தோழர் கா. வி. இராதாகிருட்டிணன் திரு. வி. க படத்தைத் திறந்து வைப்பார். சிறுருக்கு இனிப்புகள் வழங்கப்பெறும்.

மக்கள் மகிழ்ச்சி மன்றத் தோழர்கட்கு :

பொங்கல் விழாவினையொட்டி நுங்கம்பாக்கம் மக்கள் மகிழ்ச்சி மன்றச் சார்பில் (எண். 25, தென் குளக்கரை தெரு) 14-1-57 காலை 7 மணிக்கு ஊர்வலம் நடைபெறும். 13-1-57 காலை 9-மணிக்கு 'பொங்கல் விழா' பற்றிப் பேச்சுப் போட்டியும், 15-1-57 காலை 9 மணிக்கு விளையாட்டுப் போட்டிகளும், மாலை 7 மணிக்கு ஓரங்க நாடகப் போட்டிகளும், 16-1-57 மாலை 6 மணிக்கு விழாப் பொதுக்கூட்டமும் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்வோருக்கு அழைவுக் கட்டணம் கிடையாதென்றும், ஒருவரே எல்லா போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம் என்றும, கலந்துகொள்வோர் 34-வது வட்டத்தைச் சார்ந்தோராக இருக்கவேண்டும் என்றும் மேற்படி மன்றப் போட்டிப பொறுப்பாளர் இரா. இராதா அறிவிக்கிறார்.

கோவை :

14-1-57-ல், கோவை கே. வி. கே. சாமி படிப்பகத்தில், தோழர் மருதவாணன் தலைமையில் நடைபெறும். தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் பேசுவார்.

சேவூர் :

14—1—57 காலை 8 மணிக்கு சேவூர் தி. மு. கழக மன்றத்தில் விழாக் கொண்டாடப்பெறும். கொடியேற்றலும் பொங்கல் வழங்கலும் நடைபெறும்.

இரும்பேடு (வ. ஆ.) :

14—1—57 காலை 10 மணிக்கு, இரும்பேடு இளைஞர் இலக்கிய மன்றத்தில் தோழா இரா. சுந்தரராசன் தலைமையில் விழா நடைபெறும். தோழர் அ. வேணுகோபால், மற்றும் பலர் பேசுவா.

சேலம்—15-வது வட்டம்

15-1-57 மாலை 6 மணிக்கு 15-வது வட்டக் கழகச் சார்பில் எண் 2 வன்னியகுல சத்திரியர் தெருவில் (பட்டை கோவிலுக்கருகில்) தோழர் ஏ. மாரியப்பன் எம். சி. தலைமையில் நடைபெறும் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம் எல். ஏ, சிற்றுளி-சுப்பிரமணியம் ஈ. ஆர். கிருஷ்ணன், எஸ். ஏ. அன்புக்கரசு ஆகியோர் பேசுவர்.

பெங்களூர் :

14—1—57 மாலை 4 மணிக்கு பெங்களூர் ஜாலி மொஹல்லா வீதியில் பாரதிதாசன் படிப்பகத்தில் தோழர் மு. அண்ணியப்பன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் வே இளஞ்சேரன், ஜி கிருட்டிணன், சி உலகநாதன், கி சோழன் பேசுவர்.

பேரையூர் (மதுரை மா.) :

14—1—57 மாலை 6 மணிக்கு, பேரையூர் அரச மரத் திடலில் தோழர் பெரியார் பெருமாள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே. ஏ. கலையழகன், எஸ். கலிங்கன் பேசுவர்.

ஆனைமலை :

19—1—57 மாலை 7 மணிக்கு, ஆனைமலை மாரியம்மன் கோவில் மைதானத்தில் (திரு வி. க. திடல்) நடைபெறும். தோழர்கள் மு. வசனப்பித்தன், க. துரைக்கண்ணு பேசுவர். மாலை 6 மணி முதல் 7 மணி வரை இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஒ. கொண்டலாம்பட்டி :

14—1—57 காலை 9 மணிக்கு, அ. பெ. பெருமாள் செட்டி வீதியிலுள்ள அண்ணா பகுத்தறிவுப் படிப்பகத்தில் தோழர் தெ. வெ. வரதராசன் தலைமையில் நடைபெறும். தோழர் கே. வி. பழனிசாமி படிப்பகத்தில் கொடியேற்றி வைப்பார். தோழர் கே. என். அமிர்தம் பேசுவார்.

பெங்களூர் :

14—1—57 காலை 10 மணிக்கு, பெங்களூர் கவுடன் பேட்டையில் மக்கள் படிப்பகச் சார்பில் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெறும். தோழர்கள் வே. இளஞ்சேரன், ஜெ. கனகசுந்தரம், என். ரங்கராசன (கன்னடத்தில்) பேசுவா.

சங்கரபாண்டியபுரம் :

15—1—57 இரவு 7 மணிக்கு அண்ணா திடலில் தோழர் மா. குருசாமி தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர்கள் எம் ஜி. இராமச்சந்திரன், எஸ் கலிங்கன், ஏ. கே. வில்லாளன், சி. பி. அண்ணாமலை பேசுவர்.

ஏனாதி (பட்டுக்கோட்டை வட்டம்) :

16—1—57 மாலை 6 மணிக்கு வள்ளுவர் அரங்கத்தில், தோழர் ப. சி இரங்கசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் முக. மீரா, ஜி. எஸ். மணி, ப. அருணாசலம் பேசுவர்.

தும்மலக்குண்டு (வட மதுரை) :

14—1—57 மாலை 6½ மணிக்கு வள்ளுவர் திடலில் தோழர் பாலன் தலைமையில் பொங்கல் விழா, கிளைக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. சமதர்மம், மு. வசனப்பித்தன் பேசுவர்.

துக்காம்பாளையம் :

16—1—57 மாலை 6 மணிக்கு கே. வி. கே. சாமி அரங்கில், தோழர் நாராயணன் தலைமையில் பொங்கல் விழா, தி மு. கழக 2-வது ஆண்டு விழா நடைபெறும். தோழர் ஏ. சேரலாதன் கொடியேற்றுவார். தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கழகத்தைத் திறந்து வைப்பார். தோழர்கள் ஆனைமுத்து, சேரலாதன் பேசுவர்.

திண்டுக்கல் :

13—1—57 மாலை 6½ மணியளவில் திண்டுக்கல் பெரிய கடை வீதியில் சவுந்திரபாண்டியனார் நினைவு மன்றச் சார்பில் பொங்கல் விழா இசை விருந்து நடைபெறும். இசைமுரசு நாகூர் இ. எம். அனீபா குழுவினர் இசை விருந்தளிப்பர்.

பரம்புக்குடி :

14—1—57 காலை 11 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் தோழர் நா. மு. ரா. லிங்கன் தலைமையில் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்படும். மாலை 3 மணிக்கு தோழர் எஸ். தண்டபாணி தலைமையில் கழகத் தோழர்களின் சிலம்ப விளையாட்டுக்களுடன் ஊர்வலமும், மாலை 6 மணிக்கு கிளைக் கழகத்திற்கு முன் தோழர் கா[illegible] லிங்கம் தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

பர்மாவில் :

13—1—57 பகல் 3 மணிக்கு பர்மா தெங்காஞ்சுன் சன்முக[illegible] தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்ப் படிப்பகத்தில், படிப்பக[illegible] சார்பில் பொங்கல் விழா சிறப்புற[illegible] கொண்டாடப்பெறும். விழாவிற்கு சௌத் இந்தியன் சென்ட்ரல் போர்டு செயலாளர் கொ. [illegible] சுப்பையா தலைமை வகிப்பார். தோழர்கள் கே. எம். கணபதி, வி. சுப்பிரமணி, க. சேரன், [illegible] ரா. காச்சியப்பன், ஓ. எம். [illegible]ராமன், சுப. மணி ஆகியோர் பேசுவர். தோழர்கள் இரா[illegible] துரைப்பாண்டி, பி. எஸ். இராமு[illegible] கே. மாதவன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

தமிழர் படிப்பக ஆதரவில் நடை[illegible]பெறும் திருவள்ளுவர் பள்ளி[illegible] கூடக் கலியாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசு வழங்கப்பெறும்.

நன்றி அறிவிப்பு

திராவிட மாதர்கள் சார்பில் 9-1-57 மாலை சென்னை-திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடைபெற்ற தி. மு. கழக நிதியளிப்பு கூட்டத்திலும் நிதி திரட்டும் வேலையிலும் என்னுடனிருந்து ஒத்துழைத்த பல தோழியர், கிளைக் கழகத்தார்கள், மன்றத்தார்கள், தொழிலாளர் தனிப்பட்டோர் ஆகியோருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டத்திற்குத் தலைமைவகித்து நன்கு நடத்திக் கொடுத்த அன்னை வே. குப்பம்மாள் அவர்கட்கும் எனது நன்றி உரியது. சீட்டுமூலமாகவும் உண்டியல் மூலமாகவும் தேர்தல் நிதிக்குஆதரவுடன்உதவிய பொதுமக்களுக்கும், உண்டியலெடுத்துச் சென்று தொண்டாற்றிய தோழர்கள் அனைவருக்கும் சிறப்பாகத் தோழர் கண்ணதாசன் அவர்கட்கும், பல் தொழிலாளர்களுக்கும் என் ஆர்வ நன்றியுடையதாகும்.

—அலமேலு-அப்பாதுரை

சென்னை — திருவொற்றியூர் இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி

தி.மு.க.தோழர்களுக்கு

"அண்மையில் திருவொற்றியூரில் கிளைக் கழகச் சார்பில் நடைபெறவிருக்கும் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டத்தில் நமது கம்பெனித் தொழிலாளர் சார்பிலும் நிதி அளிக்க வேண்டியிருப்பதால், தொழிலாளர்கள் தங்கள் நிதியை எங்களிடம் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று, மேற்படி கம்பெனி தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழு உறுப்பினர்கள் தோழர்கள் மா. வெ. நாராயணசாமி, ஆர். ஆகியோர் அறிவிக்கின்றனர்.

நாடெங்கும் பொங்கல் நாள் விழா

சென்னை—சூளை :

14—1—57 காலை 9 மணிக்கு சென்னை—சூளை தி. மு. கழகம், ச. பா. வீதி செயராமன் பத்திரிகை நிலையம், ஊ. பு. அ. சவுந்திரபாண்டியன் படிப்பகம், 47, ஆண்டியப்ப நாய்க்கன் தெரு, கலியாணமேஸ்திரி தோட்டம் கலை வளர்ச்சி நாடக மன்றம், முத்தமிழ் நாடக மன்றம், கே. வி. கே. சாமி படிப்பகம் ஆகியவற்றில் தோழியர் சத்தியவாணிமுத்து கழகக் கொடியேற்றிவைப்பார். சிறுவர்களுக்கு இனிப்பும் தேநீர் விருந்தும் நடைபெறும்.

* * *

15—1—57 மாலை 6 மணிக்கு சென்னை—சூளை பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கலைக் கழகச் சார்பில் சூளை பழைய ஆட்டுத் தொட்டி தெருவில் தோழர் ச. கோ. நாராயணசாமி தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், வாணிதாசன் பேசுவர். அன்று காலை 8 மணிக்கு கழக அறையில் சிறுவர்க்கு இனிப்பு, பால் வழங்கப்பெறும். 10 மணிக்கு தோழர் முத்தரசன் தலைமையில் கழக அறையில் சொற்பொழிவும் பகல் 12 மணிக்கு வ. மலர்மன்னன் முன்னிலையில் ஏழைகளுக்கு உணவளித்தலும், மாலை 5 மணிக்கு சூளை சுந்தரம்—குட்டி குழுவினர்கள் நாதசுர இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

பொதுக்கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் அவர்களிடம் மேற்படி கழகச் சார்பில் தி. மு. க. தேர்தல் நிதி வழங்கப்படும்.

44-வது வட்டம் :

14—1—57 காலை 9 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் தோழர் பி. வி. ஆனந்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆர். அறிவழகன், இராம. வெள்ளையன் மற்றும் பலர் பேசுவர். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்படும்.

திருவொற்றியூர் :

13—1—57 மாலை 5 மணிக்கு தாங்கல் பஸ் நிலையம் அருகில் தோழியர் கே. ஜே. ஆலீஸ் தலைமையில் மகளிர் சேமிப்பு நிதி சார்பில் நடைபெறும். தோழியர் சத்தியவாணி-முத்து, மாணவி சற்குணம், அமுதா ஆகியோர் பேசுவர்.

சென்னை கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவை

15—1—57 மாலை 4 மணிக்கு, சென்னை கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில், சென்னை ஆண்டர்சன் மண்டபத்தில் தோழர் பாண்டியராஜ் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெறும். தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

புரசைவாக்கம்

14—1—57 மாலை 6 மணிக்கு, சென்னை புரசைவாக்கம் சிந்தனைச் செல்வி சிங்காரவேலர் மன்றச் சார்பில், தோழர் ரா. பொ. எழுமலை தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. ஜி. சம்பத்குமார் குழுவினரின் காலட்சேபம் நடைபெறும்.

இளங்கோ கலைமன்றம்

14—1—57 காலை 9 மணிக்கு, சென்னை 4-வதுவட்டம் இளங்கோ கலைமன்றச் சார்பில், தோழர் ஏ. எஸ். வேணு தலைமையில் சிறுவர் சிறுமிகளுக்குப் பொங்கல் வழங்கலும், விழாக் கூட்டமும் நடைபெறும்.

16-வது வட்டம்

14—1—57 காலை 8 மணிக்கு திருவள்ளுவர் முன்னேற்றக் கழகச் சார்பில் ஊர்வலம் நடைபெறும். வட்டக் கவுன்சிலர் எ. நாகேந்திரன் அவர்கள் விழாவில் கலந்துகொள்வார். படிப்பகமாணவ—மாணவியர் கோலாட்டத்துடனும் இன்னிசையுடனும் ஊர்வலம் நடைபெறும்.

24-வது வட்டம் :

14—1—57 காலை 9 மணிக்கு வட்டக் கழகப் பணிமனையிலிருந்து தோழர் வ. கிருட்டிணன் தலைமையில் வைக்கின் ஊர்வலம் நடைபெறும். வட்டத்திலுள்ள மன்றங்களில் காலை 7 மணிக்கு தோழர் கே. எம். கண்ணபிரான் கொடியேற்றுவார். தோழர்கள் பலர் பேசுவர். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு உணவளிக்கப்படும்.

சிந்தாதிரிப்பேட்டை :

14—1—57 காலை 10 மணிக்கு படவட்டம்மன் கோவில் தெரு கே. வி. கே. சாமி நினைவு மன்றச் சார்பில் ஏழைமக்களுக்கு அன்னம் வழங்கப்படும். மாலை 6 மணிக்கு தோழர் எம். எஸ். அப்துல்காதர் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், பி. ஏ. மூர்த்தி, எம். ஏ. கரிகாலன், சி. வி. ஆடலழகன், க. பொன்னுரங்கம் ஆகியோர் பேசுவர். 15-1-57 மாலை 5½ மணிக்கு, 3 சிறந்த இசைக் குழுவினருக்கு தோழர் தி. மணிவண்ணன் அவர்களால் வெள்ளிக் கோப்பைகள் பரிசளிக்கப்படும்.

பம்பாய் வாழ் திராவிட தோழர்கட்கு:

"வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிட விருப்பதையொட்டி தேர்தல் நிதி திரட்டப்பட்டு வருகிறது. பம்பாயிலுள்ள மக்களும் தங்களாலியன்ற நன்கொடை செலுத்தவேண்டியது நமது தலையாய கடமையாகும். பம்பாய் தி. மு. கழகக் கிளைகளில் உறுப்பினராகியுள்ள தோழர்கள் ஒவ்வொருவரும் தங்களின் ஒரு நாளைய ஊதியத்தைத் தேர்தல் நிதிக்கென செலுத்தி உதவ வேண்டும் என பம்பாய் தி. மு. க. மத்தியக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே பம்பாயில் ஆங்காங்கு உள்ள கிளைக் கழக நிர்வாகிகளும் கழக முக்கியத் தோழர்களும் நிதி வசூலித்து வருகின்றனர். இத் திங்கள் 10-ந் தேதி முதல் 15-ந் தேதிவரை கழகத் தோழர்களும் நிர்வாகிகளும் பொதுமக்களிடம் நன்கொடை வசூலிக்க வருவார்கள். அதுபோது பம்பாய் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் தங்களாலியன்ற அளவு நிதி அளித்து உதவுமாறு மிக்கப் பணிவுடன் வேண்டுகின்றேன்,"

என்று, பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுச் செயலாளர் எஸ். தியாகராசன் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

கே. வி. கே. சாமி நூல் நிலையத் திறப்பு விழா

14-1-57 காலை 8 மணிக்கு சென்னை புதுப்பாக்கம் (எல்லிஸ் ரோடு அருகில்) பக்கிரிசாயபு வீதி, 2-வது சந்தில் தோழர் எம். கே. சாமி தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் சே. முசாதர் நூல்நிலையத்தைத் திறந்தும், தோழர் தமிழ்மணி கழகக் கொடியேற்றிவைத்தும் பேசுவர். தோழர்கள் நீலநாராயணன், க. வீரபாண்டியன், தோழியர் அலமேலு-அப்பாதுரை பேசுவர். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு அன்னம் வழங்கப்படும்.

மக்கள் சக்தி வாகை....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதன் பலனை இனி வங்கத்தில் உற்பத்தித் துணிகள் மீதும் பருத்தித் துணி மீதும் விற்பனை வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் மேற்கு வங்க அரசாங்கத்திற்கு ரூ. 6 இலட்சம் ஆண்டுதோறும் வருமானத்தில் குறைந்துவிடும்.

பிரிட்டனின் புதிய பிரதமர்

புதிய பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக 62 வயது நிரம்பிய ஹெரால்டு மாக்மில்லன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். 1955-ம் ஆண்டு முதல் அவர் நிதி மந்திரியாக இருந்துவருகிறார்.

தி. மு. க. தேர்தல் நிதி நாடகம்

16—1—57 அன்று வாலாஜா பேட்டையில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக தோழர் கண்ணதாசன் தலைமையில், கிளைக் கழகத் தோழர்கள் நடிக்கும் 'கவியரசு' நாடகம் நடைபெறும்.

மேலக்கொண்டையம்பேட்டை முத்தமிழ் படிப்பகத் துவக்க விழா

14—1—57 மாலை 6 மணிக்கு, சுப்பிரமணியர் கோவிலுக்கு முன், தோழர் எஸ். ஜி. கிருஷ்ணன் தலைமையில் முத்தமிழ்ப் படிப்பகத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் அம்பில்-தர்மலிங்கம், கண்ணப்பா, எம். எஸ். மணி, வெங்கடசுப்பிரமணியம் ஆகியோர் பேசுவர்.

பர்மா இன்ஸ்டலேஷன்ஸ்

13 14-1-57 ஆகிய இருநாட்களிலும் சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள பர்மா ஷெல் நிலையில், பர்மா ஷெல் இன்ஸ்டலேஷன்ஸ் தொழிலாளர் சார்பில் விழா கொண்டாடப்பெறும். 13-1-57 மாலை 6 மணிக்கு, திறந்தவெளி அரங்கில், மேற்படி தொழிலாளரால் 'எதிர்பார்த்தது' நாடகமும், 14-1-57 மாலை 4 மணிக்கு, வெல்பேர் பிளாக்கில் விருந்தும், 5 மணிக்கு விழாக் கூட்டமும், இன்ஸ்டலேஷன் கிளப் திறப்பு விழாவும் நடைபெறும். திரு. எம். கே. சண்முகம் தலைமையில் தோழர் க. அன்பழகன் பேசுவார். நாட்டியம், விகடம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

திருவண்ணாமலை :

14—1—57 மாலை 6 மணிக்கு திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் சார்பில் பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் க. அறிவழகன், மற்றும் பலர் பேசுவர்.

குடியேற்றம் :

14—1—57 காலை 9 மணிக்கு, கழகப் படிப்பகச் சார்பில் பொங்கல் வழங்கலும், மாலை 3 மணிக்கு, சிறுவர் ஓட்டப் பந்தயங்கள் பரிசு வழங்கலும், 6 மணிக்கு திரு. டி. எம். விஜயம் எம். சி. தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெறும். தோழர்கள்பலர் பேசுவர். இரவு 8 மணிக்கு, சிறுவர் கும்மி கோலாட்டமும், 9 மணிக்கு பொய்க்கால் குதிரை விளையாட்டும், 10 மணிக்கு தோழர் கே. ஜி. வடிவேல் தலைமையில் சிலம்பு விளையாட்டும் நடைபெறும்.

மதுரை :

14, 15, 16-1-57-ந் தேதிகளில் மதுரை திருவள்ளுவர் கழகச் சார்பில் பொங்கல் விழா, அறிஞர் பாராட்டு விழா, திருவள்ளுவர் விழாவாகக் கொண்டாடப்பெறும்.

பம்பாய் :

17-1-57 மாலை 4½ மணியளவில் பம்பாய் - அந்தேரி தி. மு. கழகச் சார்பில் தோழர் ஏ. எஸ். வேலன் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

சென்னையில் சிறப்புக் கூட்டம்

13—1—57 ஞாயிறு காலை 9-மணிக்கு

கோகலே மண்டபத்தில்

'தேவலோகத்தில் சில காட்சிகள்' — **அண்ணா**

'பண்டைத் தமிழகத்தில் சில காட்சிகள்' — **இரா. நெடுஞ்செழியன்**

—என்ற தலைப்புகளில் பேசுவர்

நுழைவு நன்கொடை : ரூ. 1; அணா 8.

—நண்பர்கள் சங்கம்

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை S.I.A.A. திடலில் : 13-1-57 மாலை 6-30மணிக்கு
திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்
திரு கே. சி. ஏகாம்பரம் எம். சி. தலைமையில்
இளங்கோ நாடக மன்றம்—காகா ராதாகிருஷ்ணன், டி. கே. சம்பங்கி, எஸ். எஸ். குமரேசன் நடிக்கும்
'மகா புத்திசாலி' (தமிழ் நாடகம்)
தனிப்பகுதி : ரூ. 3, 2, 1. அணா 8. திறந்த வெளி இலவசம்
உஷா வீணை வாத்தியம், சர்க்கஸ், தந்திரக் காட்சி, ஒலியக்கலை, பாம்பே டான்ஸ், தேகப்பயிற்சி—இன்னும் பல காட்சிகள்.
பிரவேசக் கட்டணம் 0—5—0

14—1—57 திங்கள் மாலை 6-30 மணிக்கு
திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்
திருமதி ஜோதி வெங்கடாசலம் எம் எல் சி., தலைமையில்
திரு எம். ஜி. இராமச்சந்திரன் & குழுவினர் அளிக்கும்
'அட்வகேட் அமரன்' (தமிழ் நாடகம்)

15—1—57-ல் :
திரு எம். ஜி. இராமச்சந்திரன் & குழுவினர் அளிக்கும்
'இன்பக்கனவு' (தமிழ் நாடகம்)

கழகக் கூட்டங்கள்

★

ஈரோடு :
காரைவாய்க்கால் மைதானத்தில் 13—1—57 மாலை 6½ மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு
இரா. பரசுராமன்

★

சேலம்:
இராமசுந்தரமுதலி தெருவில் 18-வது வட்டம்(பாவடி) தி. மு. கழக 3-வது ஆண்டுவிழா
14—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஏ. சின்னஅப்பு
பேசுவோர் :
சிற்றுளி-சுப்பிரமணியம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
எஸ். ஏ. அன்புக்கரசு
பி. எஸ். அம்பாயிரம்
ஏ. சுப்பிரமணியம்

★

வெள்ளக்கோவில் :
சந்தைப்பேட்டையில்
16—1—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : சி. இராமசாமி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி
சி. முத்து

கடலூர் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு :

13—1—57 இரவு 8 மணிக்கு கடலூர் ஓ. டி. தி. மு. கழகப் பணிமனையில் (பள்ளியப்பன் தெரு), நகரக் கிளைச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கழக முக்கியப் பிரச்சினைகள் ஆலோசிக்கப்படும்.

வீராப்புப் பேசுவோர்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ருக்கு அச்சம் ஏற்படும்; சும்மாவிடமாட்டார்களே என்ற அச்சம் எழுந்தால் சேர்மையுடன் நடந்துகொள்வார்கள். இந்தக் கருத்துக்களையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன்.

ஆண்டுதோறும் அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றுவரும்

'திராவிடன்' பொங்கல் மலர்

★

அண்ணா, இரா. நெடுஞ்செழியன் மற்றும் பல கழக முன்னணி எழுத்தாளர்கள் அளிக்கும் சுவைமிக்க விருந்து !
ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களின் இணையற்ற முகப்பு
எல்லாம் கிளேஸ் தாள்களில்
104 பக்கங்கள்
விலை ரூ. 1-4-0
நிர்வாகி : 'திராவிடன்'-சென்னை-1

ஈரோடு தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு :

13—1—57 மாலை 5 மணிக்கு, ஈரோடு தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் இல்லத்தில் நடைபெறும். நிர்வாகிகள் தேர்தல், மற்றும் சில பிரச்சினைகள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்படும்.

பெயர் சூட்டு விழா

14—1—57 காலை 9 மணிக்கு, சென்னை — இராயப்பேட்டை, லாயிட்ஸ் வீதி, எண் 160 இல்லத்தில், எம். ஜி. ஆர். நாடக மன்றத்தைச் சேர்ந்த தோழர் முத்துக்கூத்தன் — தோழியர் மரகதம் குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா நடைபெறும். தோழர் க. அன்பழகன் பெயர் சூட்டுவார். காலை 9 மணிக்கு அனைவருக்கும் பொங்கல் விருந்தும் வழங்கப்படும்.

கலைக்களஞ்சியம் 4-வது தொகுதி வெளியீட்டு விழா

14—1—57 மாலை 5 மணிக்கு சென்னைப் பல்கலைக் கழக செனட் அறையில், திரு. அவினாசிலிங்கம் அவர்கள் தலைமையில் தமிழ் நூல் பரிசளிப்பு விழா, கலைக்களஞ்சியம் நான்காம்தொகுதி வெளியீட்டு விழா நடைபெறும். திரு. ஏ. ஜே. ஜான் பரிசு வழங்குவார். அமைச்சர் பக்தவத்சலம் கலைக்களஞ்சியம் நான்காம் தொகுதியினை வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.